
ஜாக்சன்வில் தமிழ் பள்ளியின் பருவ இதழ்

# மயிலிறகு

வாழ்க தமிழ்! வளர்க தமிழினம்!

மயில் 4 இறகு 1, 08-15-2022





## சுதந்திர தின வாழ்த்துக்கள்

# பதிப்பாசிரியர் குழுவிடமிருந்து

**அனைவருக்கும் வணக்கம்!**

## சுதந்திர தின வாழ்த்துக்கள்

**2022-23 ஆம் கல்வி ஆண்டில் உங்கள் அனைவரையும் மீண்டும் சந்திப்பதில் மயிலிறகு பெரும் மகிழ்ச்சியடைகிறது.**

**மயிலிறகு பத்திரிக்கைகான பங்களிப்பும், வரவேற்பும் அதிகரித்து வருவது குழுவிற்கு பெரும் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அளிக்கிறது. மேலும் இதில் மாணவர்களுடன், பெற்றோர்களும் உங்களுடைய படைப்புகளை மயிலிறகில் பதிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். திருக்குறள், சுவையான சுட்டிக் கதைகள், சிறுவர் பாடல், தாத்தா பாட்டிக்குக் கடிதம், தமிழ்க் குறுக்கெழுத்து விளையாட்டு, சிறுவர்களின் ஓவியங்கள், பழமொழி, மரபு விளையாட்டு, நா பிறழ் பயிற்சி, சொல் விளையாட்டு, எழுத்து விளையாட்டு, விடுகதை, தமிழின் தொன்மை சார்ந்த பல தகவல்களை உள்ளடக்கிய இந்த இதழ் உங்கள் அனைவருக்கும் பிடிக்கும் என நம்புகிறோம் . பதிப்பில் உள்ள சில தகவல்கள் மட்டுமே இணைய தளத்தில் எடுக்கப்பட்டவை, மற்ற அனைத்தும் முற்றிலும் சுயமாக உருவாக்கப்பட்டவை. அனைத்து தமிழ் சிறுவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் இவ்விதழ் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகின்றேன். எனவே இந்த இதழுக்கு சற்று நேரம் ஒதுக்கி, தாங்கள் தங்கள் குழந்தைகளுடன் படிக்கும் படி அன்பாக கேட்டுக் கொள்கிறோம்.**

**இதழை மேலும் சிறப்பிக்க உங்கள் உதவி மிகவும் அவசியம். உங்கள் கருத்துக்களையும், குறிப்புகளையும் மின்னஞ்சல் வழியாக தெரிவிக்கவும்.**

**மின்னஞ்சல் தொடர்பு:**
**KATHIRAVANP@YAHOO.COM, PRADEEKUTTY@YAHOO.CO.IN.**

**வெளியிட உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி!**

## உள்ளே.....

- சித்திரம் பேசுதடி
- கவிதைகள்
- கதை நேரம்
- வார்த்தை விளையாட்டு
- பாடி பழக
- செய்திகள்

https://jtmtamilschool.org/

# சித்திரம் பேசுதடி..

நமது தமிழ் மன்ற பொங்கல் விழாவில் குழந்தைகள் வரைந்த பொங்கல் வரைபடங்கள் கீழே ;




சஞ்சேனா சரவணன்



சஞ்சய் ராஜேஷ்

# சித்திரம் பேசுதடி..



ஷ்ரத்தா
ஹரிஹரன்




ஸ்ருதி



சஞ்சு

# சித்திரம் பேசுதடி..



தட்ச பாலாஜி




தேஜஸ்வினி
சரவணன்



தனிஷா கோபிநாத்

# கவிதைகள்

## தமிழ் மன்ற பொங்கல் விழாவை சிறப்பித்த பொங்கல் கவிதைகள் சிலவற்றை கீழே காண்போம்

1. **ஸ்ரீவித்யா**

**தைப் பொங்கல் 2022**

எண்ணத்தில் எழுச்சிப் பொங்க
இல்லந்தோறும் இனிமை பொங்க
இதயத்தில் மகிழ்ச்சி திரண்டு
வந்ததே **தைப்பொங்கல் 2022**

விடியலிலே வாசலில் வண்ணக்கோலம்
வஞ்சியர் பொறுமைக்கு சவாலாக
துடியலுடன் வாடிவாசல் காளை
வாலிபர் திறமைக்கு சவாலாக

படியில் கட்டும் தோரணம்
வீட்டிற்கு அழகு சேர்க்க
படியளக்கும் உழவர் கைக்கொண்டு
பொங்கிடுமே **தைப்பொங்கல் 2022**

அச்சுவெல்லம் பச்சரிசி நெய்மணக்க
பொங்கிவரும் வேளையில் குலவையிட்டு
பகலவனுக்கு நன்றியுடன் படைத்திடு
தித்திக்கும் **தைப்பொங்கல் 2022**

தடுப்பூசியால் தொற்றைத் தடுத்து
விழிப்புணர்வாலே கிருமிகளை வென்று
வெற்றி நடையிட்டு கொண்டாடு
**தைப்பொங்கல் திருவிழா 2022!**

## 2. சுதாகர்



**<u>பொங்கல் வெறும் கொண்டாட்டம் இல்ல</u>**

வீடுதோறும் பொங்கல் வச்சோம்
வித விதமா படையல் வச்சோம்

ஆண்டுதோறும் இந்த கொண்டாட்டம்
விவசாயி வாழ்க்க மட்டும் திண்டாட்டம்

வானுயர கரும்பு வச்சான்
அதற்கான விலைய எவனோ வச்சான்

ஆளுயர நெல்லு வச்சான்
அத அறுக்கும் முன்னே நொந்து வச்சான்

குனிஞ்சு நிமிந்து பயிரிட்டான்
பயன் அடையும் முன்னே உயிர்விட்டான்

இடை தரகர் இல்லா வியாபாரம்
விவசாயி வாழ்வில் ஒளி வரும்

அரசு போட்ட வேளாண் சட்டம்
கூடி நின்ன விவசாயி கூட்டம்

வருடம் கடந்தும் போராட்டம்
இறுதியில் வெற்றி கொண்டாட்டம்

விவசாயி வலிய உணரனும்
அவனுக்கு உறுதுணையா இருக்கணும்

நம் தட்டில் இன்று சோறு இருக்கு
அதற்கு நன்றி கடன் நமக்கிருக்கு

பொங்கல் வெறும் கொண்டாட்டம் இல்ல
இத மறந்திடாதிங்க பிள்ளைக்கு சொல்ல

# 3. வெங்கட் கதிர்வேலு

## உழவர் ஆத்திச்சூடி

அன்புடை
ஆதவா! நின்
இயற்கையின்
ஈகையில்
உழவே தலையாய்
ஊர்ந்தெழ முனைந்தும் முடியாமல்
எலிக்கரியுண்ணும் எம் உழவனை
ஏளனப் பார்வையால் ஏறி மிதிக்கும்
ஐயமுறு அசுரப்/அரசுப் பேயிடமிருந்து தாயெனக் காத்திட
ஒரு போதும்
ஓயாதே யென ஓதி
ஔவையாய் ஆக முதன்முறையாய் முயற்சித்தேன்

## உழவனின் சாபம்

வெள்ளாட்டை வேங்கையாக்கி
வல்லான் வகுத்ததே வாய்க்கால் என
பொல்லாத இரு நிறுவனங்களின் கல்லாவை நிரப்பும்
கல்லாத கயவர் கூட்டம்,
எம் உழவனை சொல்லாத சொல்லெல்லாம் சொல்லி
எதிர் வினையால் பின்வாங்கும் முன்
ஏழு நூறு உயிர்களைக் குடித்த
ஆணவம் மண்ணோடு மண்ணாக மடிந்திடுகவே!
மடிந்த எம் உழவர் புகழ் ஓங்குகவே!!

# 4. வித்யா ஶ்ரீ

"Thai Pongal 2022"

பழைய கோபங்களை களைந்து அழகிய நற்பண்புகளோடு
போகியை வரவேற்போம்!

எத்தனை பண்டிகை வந்தாலும் தரணி ஆண்ட தமிழனுக்கு
பொங்கல் மட்டுமே சிறப்பு!

எத்தனை இனிப்புகள் உண்டாலும்
கரும்பு மட்டுமே தித்திக்கும் !

மனிதனுக்கு உழைக்கும் மாடுகளுக்கு –
இது நன்றி சொல்லும் வாய்ப்பு !

மாடுகளுடன் தழுவி கொஞ்ச தமிழன்
உருவாகிய விளையாட்டே ஜல்லிகட்டு!

எறும்புக்கும் கோலம்போட்டு உணவு தந்தவன் தமிழன் ..
இயற்கையை தெய்வமாக்கி நன்றி சொல்லபொங்கலிட்டவன் தமிழன் ..!

வியர்வையை மண்ணுக்கு உரமாக்கி, விளைத்தெடுத்த
நெல்மணிகளை புதுபானையில் போட பொங்கட்டும்இந்த பொங்கல்…!
பானையில் மட்டுமல்ல நம் உள்ளத்திலும் எண்ணத்திலும்!

உலகெங்கும் வாழும் என் தாய்த்தமிழ் உறவுகளுக்கு
என் இதயம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள் !!!

## 5.உமா அரவிந்த்

### பெருந்தொற்று கழிதல்

சுட்டெரிக்கும் சூரியனைக் கொண்டு
கரோனாவின் வாரிசு ஓமிக்ரானை வென்று!
மாக்கோலமிட்ட புதுப்பானையில்
மஞ்சள் கொத்து கட்டி
பச்சைக் காய்கறிகள் படையலிட்டு
பூசணிப்பூக்கள் ஒப்பனை செய்து
நண்பர்கள் கலந்திணைந்து
முகக்கவசம் இட்ட குலவையுடன்
பொங்கி வரும் பொங்கலை வரவேற்று
கையுறையுடன் பந்தி பரிமாரி
சமூகம் ஒன்று கூடும் இந்நாளில்
சமூக இடைவெளியைக் கடைபிடிக்கும்
உன்னத பொங்கலாம் தைப் பொங்கல்!!
இனி வரும் பொங்கல் கரோனாவை கருவறுத்து
நல்வாழ்வை மீட்டெடுத்து
முக கவசத்துக்கு முடிவுகட்டி
இடைவெளிக்கு இடைவேளைவிட்டு
நம்பிக்கை ஒளியோடு பிறக்கட்டும்!!!

---------xxxxxx---------

# சினம் காத்தல்

ஒரு ஊருல ஆனந்த்னு ஒரு சின்ன பையன் இருந்தான்,அவனுக்கு அடிக்கடி கோபம் வரும்,



அவனோட அப்பா தன்னோட பையன் இப்படி கோபப்படுறது அவனுக்கும் ,அவனோட எதிர்காலத்துக்கும் ஆபத்துனு நினைச்சாரு,அத போக்குறதுக்கு அவர் ஒரு யோசனை பண்ணுனாரு

அவன கூப்பிட்டு தம்பி வர வர நீ ரொம்ப கோபப்படுற அது உனக்கு நல்லது இல்ல அதனால நீ கோபப்படுரத கொறச்சுக்கிடணும்னு சொன்னாரு,

உடனே அதுக்கு அவன் சொன்னான் என்னால கோபத்த கட்டுப்படுத்த முடியல அப்பான்னு சொன்னான் ,உடனே அவுங்க அப்பா அவன்கிட்ட உனக்கு பிடிச்ச அந்த வேலியில உனக்கு எப்பல்லாம் கோபம் வருதோ அப்ப எல்லாம் ஒரு ஆணி அடின்னு சொன்னாரு



சொல்லிட்டு ஒரு பை நிறைய ஆணியையும்,சுத்தியலையும் கொடுத்தாரு,உடனே அவன் எப்பலாம் கோபம் வருதோ அப்ப எல்லாம் ஆணி அடிக்க ஆரம்பிச்சான்

முதல் வாரத்துல 100 ஆணி அடிச்ச அவனுக்கு தான் எவ்வளவு கோபப்படுறோம்ன்ற அளவு புரிய ஆரம்பிச்சது,அடுத்த வாரம் 50 ஆணி அடிச்சான் ,தொடர்ந்து அவனோட ஆணியும் கோபமும் கொறய ஆரம்பிச்சது





அவனோட கோபம் கொஞ்சம் கொஞ்சமா கொறய ஆரம்பிச்சது ,அப்ப அங்க வந்த அவனோட அப்பா ஒரு திருக்குறள சொன்னாரு

***தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்.***


உன்னோட கோபத்த நீ கட்டுப்படுத்தலைனா அந்த கோபமே உன்ன கொன்னுடும் ,அதுதான் அந்த திருகுறளோட விளக்கம்



அதுமாதிரி இப்ப பாரு நீ எவ்வளவு கோபத்தை கட்டுப்படுத்தி இருக்கன்னு ,தொடர்ந்து நல்ல பழக்கங்களை கடைபிடிச்சு,காரணம் இல்லாம வர்ற கோபத்தை கட்டுப்படுதுன்னு சொன்னாரு

அன்னைல இருந்து தன்னோட கோபத்தை கொறச்சு நல்ல பிள்ளையா மாறிட்டான் ஆனந்த்

# கதை நேரம் –படக்கதை



ஒரு நாள், நாய் ஒன்று காட்டில் வழி தவறிவிட்டது. அப்பொழுது அங்கு சிங்கம் ஒன்று பசியோடு அலைவதைப் பார்த்த நாய் ஒரு நிமிடம் பதறி இன்றோடு நம் கதை முடிந்தது என்று எண்ணியது
அப்பொழுது அங்கு கிடந்த எலும்பு துண்டுகளைப் பார்த்ததும் அருமையான திட்டம் ஒன்றை தீட்டியது. சிங்கம் வரும் வழியில் திரும்பி உக்கார்ந்து கொண்டு எலும்பு துண்டுகளை சுவைக்க தொடங்கியது. சுவைத்து கொண்டே சத்தமாக,
சிங்கத்தை கொன்று தின்பது எவ்வளவு சுவையாக உள்ளது. ஆனால் வயிறு நிறையவில்லை. இன்னொரு சிங்கம் கிடைத்தால், ஆறா வயிறு நிறைந்து விடும்
பயந்து அங்கிருந்து ஓடி போனத சிங்கம்
அய்யோ... இந்த நாய் சிங்கத்தை அல்லவா கொன்று தின்கிறது
இதையெல்லாம் மரத்தின் மேல் இருந்து குரங்கு ஒன்று பார்த்து கொண்டிருந்தது. சிங்கத்தை ஏமாற்றிய இந்த நாயை சிங்கத்திடம் போட்டுக் கொடுத்தால், சிங்கத்தின் நட்பை பெற்று வாழ் நாளெல்லாம் பயம் இல்லாமல் வாழலாம் என்று நினைத்தது. உடனே சிங்கத்திடம் சென்று, நாய் செய்த தந்திரத்தைப் பற்றி சொன்னது. அதை கவனித்த நாய் ஏதோ தப்பு நடக்க போகிறது என்று உணர்ந்தது
இப்பொழுது அந்த நாயை என்ன செய்கிறேன் பார். நீ என் முதுகில் ஏறி கொள்
குரங்கை முதுகில் ஏந்திய படி நாய் இருந்த இடத்தை நோக்கி ஓடியது.சிங்கம் பாய்ந்து வருவதைப் பார்த்த நாய், முன் போலவே திரும்பி உட்கார்ந்து கொண்டு,
இந்த குரங்கை அனுப்பி ஒரு மணி நேரமாகிவிட்டது. இன்னும் ஒரு சிங்கத்தைக் கூட ஏமாற்றி அழைத்து வரவில்லையே
இதை கேட்டதும், சிங்கம் குரங்கைத் தூக்கி எரிந்து விட்டு திரும்பிக்கூட பார்க்காமல் ஓடியே விட்டது
கடுமையாக உழைப்பதை விட திறமையாக உழைக்கக் கற்றுக்கொள்ளுங்கள்". வெற்றிகளை உங்கள் வசப்படுத்தி விருநடை போடுங்கள்.

# விளையாடு வினையாக்கு!

## கற்பனை  திறனை காட்டு




படத்தில் கதையை நிரப்பி விடையை
அனுப்பவும்

# விளையாடு வினையாக்கு!

I. விடுப்பட்ட எழுத்தை எழுதுக.

1. ச--- கரம்; 


2. மீ----- 

3. குள------ 

4. வா----து 

5. பூ----டு 

6. மஞ்ச----- 

7. சாம----தி 

8. மூங்கி---- 

**விடைகளை**
kathiravanp@yahoo.com
Pradeekutty@yahoo.co.in**என்ற**
**முகவரிக்கு மின்அஞ்சல் அனுப்பவும். சரியான விடை அளிப்பவருகக்கு ஒரு ஆச்சரியம் காத்துக் கொண்டிருக்கிறது**

# பாடி பழக

## நிலா நிலா ஓடி வா

நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலை மேலே ஏறி வா
மல்லிகைப் பூ கொண்டு வா
பட்டம் போல பறந்து வா
பம்பரம் போல் சுற்றி வா.

## கை வீசம்மா கை வீசு

கை வீசம்மா கை வீசு
கடைக்கு போகலாம் கை வீசு
மிட்டாய் வாங்கலாம் கை வீசு
மெதுவாய் தின்னலாம் கை வீசு
சொக்காய் வாங்கலாம் கை வீசு
சொகுசாய் போடலாம் கை வீசு
கோவிலுக்கு போகலாம் கை வீசு
கும்பிட்டு வரலாம் கை வீசு

https://jtmtamilschool.org/

# செய்திகள்

- **பள்ளி நோக்குநிலை** ( Orientation) – 8/13 2.30PM (**புதிய மாணவர்களுக்குத் தேவை**)
- **பள்ளியின் முதல் நாள்** – 8/20
- 2022-23 – **பள்ளி நடக்கும் நேரம் –சனி மதியம்** 2.30-4.30
- **பள்ளியின் முதல் நாளில்** (8/20/2022) **புத்தகங்கள் விநியோகிக்கப்படும்**
- **விரைவில் விளையாட்டு வகுப்பை மீண்டும் தொடங்குவோம். மேலும் இது சுமார்** 30-45 **நிமிடங்கள் மற்றும் வாரம் ஒரு நிலைக்கு இருக்கும்.**
- **தன்னார்வலர்கள் தமிழ் பள்ளிக்கு வரவேற்கப் படுகிறார்கள்**
- **நமது தமிழ் பள்ளி இணையதளம்**; https://jtmtamilschool.org/